Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி [illegible] சுப்பிரமணியன்

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 ஈரோடு, 2-6-1945 வைகாசி-மீ 20உ மலர் 34

# உறவு முறை

(பெரியார் ஈ. வெ. ரா.)

மக்கள் சமூகத்தில் சொந்தம் பாராட்டவும் சொத்துக்கள் அனுபவிக்கவும் கலவிகள் செய்யவும், உறவு முறை என்பதாக ஒரு நியதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அந்நியதிக்கு எவ்வித கொள்கையும், ஆதாரமும் இல்லாமலும் உலகமெங்குமுள்ள மனித சமூகத்தில் ஒரே விதமான உறவு முறை அனுஷ்டிக்கப்படாமலும், தேசாச்சாரம், ஜாதியாச்சாரம், மதாச்சாரம், பழக்கம், வழக்கம் என்கின்ற பலவகையான மார்க்கத்தைப் பின்பற்றியே உறவு முறைகள் கையாளப்படுகின்றன; யாதொரு நியாயமும் காரணமும் சொல்லப்படாமலே பின்பற்றப்படுகின்றன. அவ்வளவோடுமாத்திரமல்லாமல் இம்முறைகள் சிறிதும் தவறாமல் மிகவும் ஜாக்கிரதையாய் கையாளப்படவேண்டுமென்கின்ற நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகியிருக்கின்றன.

ஆகவே, இவைகளையெல்லாம் பார்த்தால் உறவு முறைகள் என்பவை அர்த்தமற்ற பழக்கவழக்கத்தில் கட்டுப்பட்டதாகவும், குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகவுந்தான் காணப்படுகின்றனவே தவிர அவசியங்களை அறிந்து கொண்டதாகக் கருத முடியவில்லை.

உதாரணமாக, சகோதரர்கள் விஷயத்தில், ஆண் சகோதர உறவுக்கு ஒரு முறையும், பெண் சகோதர உறவுக்கு ஒரு முறையும் கையாளப்பட்டு வருகிறது. ஆண் சகோதரன் வயிற்றில் பிறந்த குழந்தைகளை தங்கள் தங்கள் குழந்தைகளாகவும், பெண் சகோதரி வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தாங்கள் கலியாணம் செய்யத்தக்க பந்தத்துவம் உடையவர்களாகவும் இந்துக்களில் பெரும்பாலோர் கருதுகிறார்கள்,

முஸ்லிம் சமூகத்திலோ பெண் சகோதரி மகளை கலியாணம் செய்துகொள்ளுவது தகாது என்றும், சிறிய தகப்பனார், சிறிய தாயார் பெண்ணைக் கலியாணம் செய்வது தகும் என்றும் கருதப்படுகிறது.

சில சமூகங்களில் ஒருவித ரத்தக் கலப்பும், முன் சம்பந்தமும் இல்லாதிருந்தாலும் குலங்கள் பெயரையும், கோத்திரங்கள் பெயரையும் பார்த்துக்கொண்டு அதன் பேரிலேயே கலவிக்கு-கலியாணத்துக்கு முறைகள் வைத்துக் கொள்ளப்படுகின்றன.

கிறிஸ்துவர்கள் சமூக உறவு முறை என்பதும் எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உடன்படாமல் கண்மூடித்தனமாய் ஏதோ ஒரு முறையைப் பின்பற்றப்படுவதாய் இருக்கின்றது.

வேறு நாடுகளில் தன் கூடப் பிறந்த சகோதரிகளையே, அதாவது சயாம் தேசத்தில் ஆரிய மதத்தைப் பின்பற்றுகின்ற அரசர்கள் தம் கூடப் பிறந்த தங்கையையே மணந்து கொண்டு கலவி செய்கிறார்கள். பவுத்த ராமாயணத்தில், ராமனுக்குச் சீதை உடன்பிறந்த தங்கை என்றும், அக்காலத்தில் ஆரியர்களில் ஒரே தாய் தகப்பன் வயிற்றில் பிறந்த அண்ணன் தங்கைகள் கலியாணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்ததென்றும், அதை அனுசரித்தேதான் இப்போது சயாம் தேசத்தில் நடந்துவருகிறதென்றும் அறியக்கிடக்கின்றது.

மலையாள தேசத்தில் சில பாகங்களிலும், திபேத்து தேசத்திலும் ஒரு பெண் பல புருஷருக்கு மனைவியாய் இருக்கும் வழக்கம் இருந்து வருகிறது. நம்நாட்டில் ஒரு புருஷ[illegible] ஸ்திரீகளைக் கலியாணம் [illegible] கொள்ளுகிறான்.

சில ஜாதிகளில் ஒரு குடும்பத்தில் மகனுக்குக் கட்ட[illegible]பட்ட பெண் தகப்பனுக்கும், கலியாணம் செய்து கொண்டவனுடைய மற்ற சகோதரர்களுக்கும் கலவிக்குரிய ஸ்திரீயாகக் கருதப்படுகிறாள்.

நம் நாட்டில் தாசி ஜாதி என்பவர்களிலும், மலையாளத்தில் நாயர் ஜாதி என்பவர்களிலும் குடும்ப சொத்துக்குப் பெண்களே உரிமையானவர்களாக இருக்கிறார்கள். மற்ற சமூகங்களில் குடும்ப சொத்துக்குப் பாத்தியஸ்தர்கள் ஆண் பிள்ளைகள் மட்டுந்தான் என்று கருதப்படுகின்றது.

இஸ்லாம் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட்டு, பங்கில் வித்தியாசம் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியர்களிலும் உறவு முறை, கலியாண முறை ஆகியவைகளில் இந்தியாவைவிட பல மாறுதல்களும் பல தலைகீழ் முறைகளும் இருக்கக்காண்கின்றோம். அத்தை மக்கள், சிற்றப்பன் மக்கள் ஆகியவர்களை ஒரே மாதிரியாக ('கௌஸின்'-'கஸின்')ப் பாவிக்கிறார்கள். அதுபோலவே சகோதரன் மக்களுக்கும், சகோதரி மக்களுக்கும் ஒரேவிதமான உறவு முறை கொண்டாடுகிறார்கள். அழைக்கும் முறையிலும் ஒரே,

ரோஜர் முத்தையா

முறை வைத்துத்தான் அழைக்கிறார்கள்.

சில தேசங்களில் பெண்கள் பாடுபட்டு சம்பாதித்து ஆண்களுக்குப் போடுகிறார்கள் அத்தேசங்களிலுள்ள ஆண்கள், இங்குள்ள பெண்களைப்போல, அலங்காரம் செய்துகொண்டு, பெண்களுடைய போகப்பொருளாய் வீட்டில் இருக்கிறார்கள்.

சிலவிடங்களில் விபசாரத்தனத்துக்காக பெண்களை நீக்கி வைக்கிறார்கள். வேறு சிலவிடங்களில் அதே போன்ற விபசாரத்தனத்துக்காக ஆண்களை நீக்கி வைக்கிறார்கள். சில விடங்களில் ஆண்கள் விபசாரத்தனத்தை குற்றமாகப் பாவிப்பதில்லை. இன்னுஞ் சில விடங்களில் பெண்கள் விபசாரத்தனமே குற்றமாகப் பாவிக்கப்படுகிறது. மற்றுஞ்சில விடங்களில் விபசாரத்தனம் எவ்வளவு இருந்தாலும் அதைப்பற்றிய பேச்சே யில்லாமல் இருந்துவருகிறது. சில வகுப்பார்கள் பெண்களைக் கலியாணமே செய்துகொள்வதில்லை.

சிலர் புருஷன் செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; ஆனால் பெண்சாதி செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. வேறு சிலர் மனைவி செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; புருஷன் செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. அதுபோலவே சிலர் ஆண்குழந்தை செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; வெகு நாளைக்கு விசனப்படுகிறார்கள். ஆனால் அங்கு பெண் குழந்தைகள் மரணத்துக்கு அதிகம் கவலைப்படுவதில்லை சில விடங்களில் பெண் குழந்தைகள் மரணத்துக்காக அடைகிற விசனமும் துக்கமும் ஆண் குழந்தைகள் சாவை முன்னிட்டு அவ்வளவாக அடைகிறதில்லை. பொதுவாய் சாவுக்காக துக்கப்படுவது பெரும்பாலும் வயது, நிலைமை, இறந்தவர்களால் தங்களுக்கு ஏற்பட்ட-ஏற்படும்-பலாபலன் முதலியவைகளைப் பொறுத்தே உண்டாவதாயிருந்து வருகிறது.

ஆகவே கலவிக்கும், துக்கத்துக்கும், விபசாரத்துக்கும், சொத்துக்கும், கலியாணத்துக்கும் அகில உலக மனித சமூகம் முழுமைக்கும் பொருந்தும்படியான ஒரு முறையோ, வரையறையோ, காரண காரியங்களோ பொதுவாய் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

பழைய சரித்திரம் ஒன்றில், ஒரு தேசத்து அரசமுறையில் அந்த அரசனுடைய (ராணி) பெண்சாதி இறந்துவிட்டால் உடனே அந்த அரசனின் மகள் ராணி (மனைவி)யாக ஆகிவிடுகிறாள் என்றும், அரசன் இறந்துவிட்டால் உடனே மகன் ராஜ (புருஷ)னாக ஆகிவிடுகிறான் என்றும், உண்மையான புருஷன் மனைவியாக ஆகிவிடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது.

இவைகளையெல்லாம் யோசிக்கும்போது கலவிமுறை என்பதும், சொத்துமுறை என்பதும் பெரும்பாலும் தேசாச்சாரம், மதாச்சாரம் அல்லது ஜாதியாச்சாரம் பழக்கவழக்கம் முதலியவற்றைப் பொறுத்திருக்கிறதே தவிர, வேறு நியாயமான—சிறப்பானதான— உலகமெங்கும் ஒரே வழி அறையான— காரண காரியமான முறை கிடையவே கிடையாது என்றுதான் யூகிக்கவேண்டியிருக்கிறது. இது விஷயத்தில் மற்ற ஜீவன்களின் இயற்கை சுபாவங்களும் எவ்வித வரையறைக்குக் கட்டுப்பட்டதாகவுங் காணமுடியவில்லை.

நமது பழங்கால- புராணங்களைப் பார்த்தால், தான் பெற்ற மகளையும், தன்னை ஈன்ற தாயையும் புணர்ந்த கதைகள் பல இருக்கின்றன. முறையற்ற விபசாரத்தன சம்பந்தமான கதைகள் எண்ணிறந்தவைகளிருக்கின்றன. குருவின் மனைவி, சகோதரன் மனைவி ஆகியவர்களைக் கலவி செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. பிள்ளைப்பேற்றுக்காக வேறு புருஷருடன் செய்யுங் கலவி குற்றமாகக் கருதப்படவில்லை. சில விடங்களில் சிஷ்யைகள் குருமார்களுடன் கலவி செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. சிலவிடங்களில் பிராமணர்களுடன் கலவி செய்வதைப் பிசகென்று கருதுவதில்லை. கடவுள்கள் பக்த பெண்களிடம் கலவி செய்த கதை அனந்தம்.

பத்துப் பணத்துக்கு மிஞ்சின பதிவிரதை இல்லை என்றும், ஆணும், இடமும் கிடைத்தால் எந்தப் பெண்ணும் பதிவிரதையாய் இருக்க முடியாது என்றும் "தர்ம சாஸ்திரம்" கூறுகின்றன.

பெண் கதியே இப்படியானால் ஆண் கதியைப் பற்றிக் கூறவேண்டுமா?

ஆகவே இவ்விஷயங்களில் இன்னதுதான் சரி, இன்னதுதான் தப்பு என்று குறிப்பிடுவதற்கில்லாமல் இருந்து வருகிறது. ஆனாலும் கலவிக்கான வைத்திய முறைப்படியும், தேகதத்துவ முறைப்படியும் சில முறைகள் கற்பிக்கப்பட்டிருப்பதை குற்றமென்று சொல்ல இதுவரை எவரும் முற்படவில்லை. ஆதலால் இதைப் பகுத்தறிவுள்ள மனிதன் ஒப்புக்கொண்டாகவே வேண்டும் என்றுஞ் சொல்லலாம்.

என்றாலும் கலவியைப்பற்றிய காரியங்களுக்கு பாவம், புண்ணியம், கடவுள் தண்டனை, மானம் என்பவைகள் பொருத்தமாகும்படியாக எவ்வித குறிப்பிட்ட ஒரே மாதிரியான முறையும் கண்டுபிடிக்கமுடியாமலிருந்து வருகின்றதென்பது மேற்கண்ட விஷயங்களால் கருதவேண்டியிருக்கிறது.

இந்த உறவுமுறை சம்பந்தம், கலவி சம்பந்த மாத்திரமல்லாமல் மற்றும் மனித ஒழுக்க சம்பந்தமான பல காரியங்களிலும் பாவபுண்ணியம் நிர்ணயிக்கவோ, நன்மைதின்மை நிர்ணயிக்கவோ முடியாமல், இதுபோலவே தேசத்துக்கு ஒரு முறை, மதத்துக்கு ஒரு தினுசு, வகுப்புக்கு ஒரு மார்க்கம், ஜாதிக்கு ஒரு விதம் என்பதாகத்தான் இருந்து வருகிறது.

ஆகவே, இவ்விஷயங்களை எடுத்துக்காட்டி, மனிதன் எப்படி நடந்துகொள்ளுவதென்னும் கேள்விக்குப் பொது அறிவும் ஆராய்ச்சியுமுள்ள மனிதன் என்னசொல்ல முடியும் என்று யோசிக்கும்போது 'சமயோசிதம்' என்பதைத் தவிர வேறு வழிகாட்டி இருப்பதாக அறிய முடியவில்லை என்பதற்காகவே இவ்வுறவு முறை விஷயத்தை உதாரணமாக எடுத்துக் காட்டவேண்டியதாயிற்று.

---

பாப்பையாபுரம் தோழர் பி. எஸ். ராமசாமி அவர்களின் மரண அனுதாபக் கூட்டம் கொழும்பில் 17-4-45ம் தேதி தோழர் எஸ். என். பெரியசாமி தலைமையில் நடந்தது.

ரோஜா முத்தையா

# மிராண்டா-கஜேந்திரன் வாழ்க்கை ஒப்பந்தச்செய்தி

II

(காட்சியின் மாட்சிக்கோர் சாட்சி தீட்டுவது

திருப்பத்தூர், மே. 26-

நேற்றைய தினம் நடைபெற்ற மிராண்டா-கஜேந்திரன் வாழ்க்கை ஒப்பந்தத்தைக் காண திராவிட நாட்டின் பல பகுதிகளிலிருந்து தோழர்கள் பலர் வந்திருந்தனர். சென்ற கிழமை மலரில், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய ஒரு சில தோழர்களின் பெயர்கள் தாம் குறிப்பிடப்பட்டிருந்தன. அவை தவிர, மேலும் சுமார் ஒரு நூறு வாழ்த்துச் செய்திகள் இதுவரை குவிந்திருக்கின்றன.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, கும்பகோணம் கே. கே. நீலமேகம், புரட்சிக்கவி பாரதிதாசன், சி. என். அண்ணாதுரை, திருப்பத்தூர் சப்கலெக்டர் கபூர் ஐ. சி. எஸ்., சேலம் நகரசபைத்தலைவர் பி. ரத்தினசாமி, பழயகோட்டை இளையகுமார பட்டக்காரர் ந. அர்ச்சுனன், வட ஆற்காடு ஜில்லா போர்டு தலைவர் பி. பக்தவத்சலு நாயுடு, எம். பி. ரங்கசாமி ரெட்டியார், சென்னை எஸ். குருசாமி, குஞ்சிதம், என். வி. நடராஜன், சங்கரய்யர், ஆனைமலை நரசிம்மன், கிருஷ்ணசாமி, வெங்கட கிருஷ்ணன், வரதராஜ நாய்க்கர், வாணியம்பாடி நகரசபை துணைத் தலைவர் வி. எஸ். விசுவநாதன், ஏ. சி. கந்தசாமி முதலியார், சின்னய்யரெட்டியார், இசுலாமியா உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அப்துல் குத்தூஸ், வெள்ளக்குட்டை பெரியசாமி கவுண்டர், குன்னத்தூர் ஆறுமுகம், தருமபுரி டிப்டி கலெக்டர் சங்கய்ய நாயுடு, திருப்பத்தூர் டி. எப். ஓ. (D F. O.) திருமூர்த்தி அய்யர், சேலம் கல்லூரித் தலைவர் அ. ராமசாமிக் கவுண்டர் எம். ஏ., எல். டி., கனகம்மையார், ஆரூர் சென்னி செட்டியார், பெத்தாம்பாளையம் பழனிசாமி, கானாடுகாத்தான் வை. சு.—மஞ்சளாபாய், குடியாத்தம் சிருவேல் துரைசாமி செட்டியார், தருமபுரி பி. அப்பாவு பிள்ளை, பி. பொன்னுசாமி, ஏ. வி. கிருஷ்ணன், ச[illegible] ரெட்டியார், கிருஷ்ண [illegible] நுமந்த நாயுடு, திருப்பத்தூர் [illegible] எம். இராகவ முதலியார் பி. ஏ., பி. எல்., நகரசபைத் தலைவர் வி. எஸ். வீரபத்திரன், சி. எம். சுப்பிரமணிய நாயுடு, கோவிந்தராஜன், மண்டி சிதம்பரம் செட்டியார், நடேசன், தாலூக்கான் சாயபு, சி. வி. எம். ஜெயராமன், வக்கீல் நாராயண அய்யர், வி. எம். ராஜமாணிக்கம், கே. ஆர். ராஜகோபாலன், ஜி. தேவராஜன், காரைக்குடி ராம. சுப்பய்யா முதலிய சுமார் ஆயிரம் மக்கள் வரை குறிப்பிடத்தக்கவர்கள் வந்திருந்தார்கள். வாழ்க்கை ஒப்பந்தம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதும், மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. பொன்மலை திராவிட வாலிபர் கழகத் தோழர்களும், பிறரும் மாலை அணிவித்தார்கள்.

சேலம் கல்லூரித் தலைவர் தோழர் அ. ராமசாமிக் கவுண்டர் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் தொடங்கப்பெற்றது..

## தலைவர் பேச்சு

"இத்திருமணத்திற்குத் தலைமை வகிக்க எல்லா வகையிலும் தகுதியுடையவர் நமது திராவிட நாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களே யாகும்.

"எனினும் அவர்கள் என்னைத் தலைமை வகிக்க உத்தரவிட்டதால், நான் இப்பணியை ஏற்றுக்கொண்டேன். மணமகள் மிராண்டா நமது தலைவர் பெரியார் அவர்கள் இல்லத்தில் தோன்றியவர். எனவே அவருக்கு நான் அதிகம் கூற வேண்டுவதில்லை. மணமகன் கஜேந்திரன் பெரியார் அவர்களுக்குக் காரியதரிசியாக இருந்து தொண்டு புரிந்தவர். அவர் பகுத்தறிவு இயக்கத்தில் குன்றாத உணர்ச்சிகொண்டவர் என்பதை நான் கூறத் தேவையில்லை; நல்ல வீரமும், கொள்கையில் பற்றுதலும் கொண்டவர். மணமக்கள் இருவரும் உயர்தரமான கல்வி கற்றவரென்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி."

தோழர் குஞ்சிதம் குருசாமி பி. ஏ., எல். டி., பேசுகையில் உற்றார் உறமனுக்குப் பணியாமல் கொள்கையே சிறந்ததெனக் கொண்டு மணமகளுக்குத் தாலி கட்ட மறுத்த மணமகன் வீரத்தையும், நேர்மையையும், உறுதிநிலையும் பாராட்டினார்.

## புரட்சிக்கவி பாரதிதாசன்

"நான் அதிகம் கூறப்போவதில்லை; கூறவேண்டிய அவசியமும் இத்திருமணத்தில் ஏற்படவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் பெரியார் அவர்கள் ஒரு கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில், ஒருவன் 'உமது மகளை வேறு ஜாதியில் மணம் செய்து கொடுப்பீரா?' என்று கேட்டான். அதற்குப் பெரியார், 'மகளை வேறொருவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதென்பது முறையேயல்ல. அது மகளின் சொந்த விஷயம். நாம் அதற்குப் பொறுப்பாளிகளாக இருப்பதே ஒழுக்குக்குவிரோதம்', என்று பதிலளித்தார்கள். அப்பா அவர்களின் பரந்த நோக்கத்திற்கேற்ப நமது மிராண்டா அம்மையார் தோழர் கஜேந்திரன் அவர்களை வாழ்க்கைத் துணைவராக மனமுவந்து ஏற்றுக்கொண்டார். இதற்குப் பெரியாரின் உத்தரவையோ, அல்லது அவர்களின் அண்ணாரின் சம்மதத்தையோ அவர் எதிர்பார்க்கவில்லை. பெரியவர்களும் அவ்விஷயத்தில் குறுக்கிடவில்லை.

"நமது தோழர் குஞ்சிதம் அம்மையார் பேசிய போழ்து இத்திருமணத்தைச் சிலர் எதிர்க்கிறார்களென்று குறிப்பிட்டார். ஆம்; அறிவை அசம்பாவிதம் எதிர்க்கிறது. முற்போக்கைப் பிற்போக்கு எதிர்க்கிறது. ஆக இவ்வெதிர்ப்புக்கள் நீடித்து நிற்க முடியாது; ஏற்கனவே அவை கலகலத்துவிட்டன. எனவே, இவ்வெதிர்ப்புக்களைக் கண்டு யாரும் மனச்சோர்வு அடையவேண்டாம்."

கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் பேசுகையில் அத்திருமணம் தன்மான இயக்கத்

ரோஜா முத்தையா

தில் குறிப்பிடத்தக்கது என்று ஆவேசம் ததும்பப் பேசினார்.

மஞ்சுளாபாய்

"தாலிகட்டுவது இத்திருமணத்தில் இல்லை என்று குறிப்பிடப்பட்டது. நான் கூறுகிறேன்: என் சகோதரிகளுக்கு, இனிமேல் ஆண்கள் தாலிகட்டவேண்டும் என்று கூறப்படுமாயின் பெண்களும், ஆண்களுக்குத் தாலிகட்டும் உரிமை கேட்கப்படவேண்டும். அம்மாதிரி எங்கள் செட்டிநாட்டில் ஏற்பட்டது."

சேலம் குகை கே. ஜெகதீச செட்டியார் மணமக்களை வாழ்த்தியும், அவர்கள் செய்யவேண்டிய வருங்கால சேவையைப் பற்றியும் பேசினார்.

வாணியம்பாடி தோழர் வி. என். விசுவநாதன் வைதீக திருமணத்தில் ஏற்படும் அடிமைத்தனத்தையும், சீர்திருத்தத் திருமணத்தில் ஏற்படும் உரிமை வேட்கையையும் எடுத்துக் காட்டிப் பேசினார்.

வாணியம்பாடி தோழர் அப்துல் குத்தூஸ் சாயபு மணமக்களை வாழ்த்தியும், சீர்திருத்தத் திருமணத்தின் முக்கியத்துவத்தையும், அதன் காரணமாகவே இந்நாட்டு மக்கள் எழுச்சியடைய வேண்டியிருக்கிறதென்றும் பேசினார்.

சேலம் சேர்மன் பி. ரத்தினசாமி

"இதுவரை நான் தலைவர் பெரியார் அவர்களுடன் பல சீர்திருத்த திருமணங்களுக்குச் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் பெரியார் அவர்கள் பேசும்போது திருமணங்களில் மேலும் சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டுமென்று கூறிவந்தார்கள். அந்த நிலை இன்றைய திருமணத்தில் கண்டேன்."

பின்னர் சென்னை எஸ். குருசாமி, பெரியார், சி. என். அண்ணாதுரை ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

பரிசளித்தவர்களுக்கும் புகழுரை நல்கியவர்களுக்கும் நன்றி கூறுமுகத்தான் மணமகன் தோழர் கஜேந்திரன் கூறியவை:

"தலைவர் பெரியார் அவர்களே, தோழர்களே!, உண்மையிலேயே பொதுமேடைகளில் எனக்குப் பேசத்தெரியாதென்றாலும், தலைவர் என்னைப் பேசுமாறு பணித்துள்ளார். அதை ஓர் கடமை என்று கருதியே பேராசிரியர் கட்டளையை சில சொற்களில் நிறைவேற்றிவிடுகிறேன்.

"நான் மிகமிக சாதாரணமானவன். என்மீது அவர்களுக்கிருக்கும் அளவிலா ஆசையில், பேசிய தோழர்கள் அனைவரும் என்னை இரணியன் என்றும் இராவணன் என்றும் பிரமாதமாகப் புகழ்ந்துவிட்டார்கள்.

"என்னை இந்திரன், சந்திரன் என்று புகழ்ந்ததாக நான் எடுத்துக் கொள்ளமாட்டேன். அதற்குக் காரணம் இந்திரனோ, அல்லது சந்திரனோ உள்ளபடியே யோக்கியர்களோ, பெரியவர்களோ அல்லர்.

"எனவே, இங்கு வந்திருந்து எனது வாழ்க்கை ஒப்பந்த வைபவத்தில் கலந்துகொண்ட தோழர்களுக்கும், பரிசுகள், புகழுரைகள் நல்கிய தோழர்களுக்கும், என் சார்பிலும், எனது வாழ்க்கைத் துணைவியர் மிரண்டா அவர்கள் சார்பிலும், உங்கள் அனைவருக்கும், எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்." (கைதட்டல்)

பின்னர் தோழர் ஜி. சாமிநாயுடு பி. ஏ., பி. எல்., அவர்கள் நன்றி கூறுகையில் காதல்-கலப்பு மணங்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

# இருதயம்!

[தூ. உ, க.]

வைத்தியர்கள் 'இருதயம்' உடலில் உள்ள ஒரு உறுப்பு என்கிறார்கள், மனோதத்துவ ஆசிரியர்கள் 'உணர்ச்சி பிறக்கும் இடம்' என்கிறார்கள். தன் மதிப்பு, பச்சாதாபம், அழகு, உண்மை முதலிய உணர்ச்சிகள் ஒருவரைப் பாதிக்காமல் போகுமானால் அந்த மனிதரை 'இருதயம் இல்லாத ஆசாமி!' என்று உலகம் முடிவுகட்டுகிறது. நியாயமில்லாத சுயநலத்திற்கு அடிமைப்பட்ட மனிதனுக்கு உலகம் சாட்டும் குற்றமும் உறைப்பதில்லை.

* *

தன்மதிப்புக்கு அழிவு இழிவு வருவதைமட்டும் மனித இருதயம் சகிப்பதில்லை. வேகமாக துடிக்கிறது. அந்தத் துடிப்புக்குக் காரணமாக செய்கைகள் பிறக்கின்றன. அப்படிப் பிறந்த செய்கைகளின் பலன் தான் ஜஸ்டிஸ் கட்சியின் பிரசவம். தமிழனின் தன்மதிப்பு உணர்ச்சியால் உண்டாகும் இருதயத் துடிப்புதான் கட்சியின் போஷணை. நெல் பயிரோடு பயனற்ற புல் பூண்டுகள் முளைப்பதுபோல் பகதூர்களும், சர்களும், ராஜாக்களும் அவதாரமெடுத்தது அக்கட்சியின் எருவினாலேதான்! ஆனால் ஏற்றிய ஏணியை முடிவில் உதைத்துத் தள்ளுவது ஒருவகையான புத்திசாலித்தந்திரமல்லவா? அந்தத் துரோக தந்திரத்தை 'மேதாவித்தனம்' என்று நினைத்து நடக்கும் பிரபுக்களுக்கு இருதயம் ஏது? நுகரும் உணர்ச்சியும், பார்வையும் அற்றுப்போன மனிதனை நந்தவன அழகு பராமரிப்பில் அமர்த்துவதால் நந்தவன கம்பீரம் என்னாகும்? செயற்கையால் உண்டாக்குகிற நீர் ஊற்றுகள் வற்றிப்போனாலும், இயற்கையாக ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடும் நீர் நிலைகளால் தாவரவர்க்கம் ஜீவித்திருக்கிறது! 'தன் இனம் இழிவுபடுகிறதே! அது தலை நிமிர்ந்து நிற்கும் காலம் விரைவில் வேண்டுமே!" என்ற உள்ளக்கொதிப்புடன் தன் உடலையே அப்பணிக்கு அர்ப்பணம்செய்து நிற்கும் ஈ. வெ. ரா. போன்ற இயற்கை ஊற்றுகள் இல்லாமல் இல்லை! விவசாயி பெரும் புதர்களை அப்புறப்படுத்தி, வாழ்க்கைக்கு இன்றியமையாத தானியத்தை விருத்திசெய்வதுபோல, தான் தோன்றி முட்புதர்களான பகதூர்களையும் சர்களையும் அகற்றி இழிவை ஒழித்து தன்மான மரியாதை அளிக்கும் விருட்சமான கட்சியை வளர்க்கும் தொண்டர்களும் தமிழ் நாட்டில் இல்லாமல் இல்லை! தன்மானத்தை உணர்ந்து, கட்சியின் சேவைக்கு தன் கடமையைச் செய்யத் தயங்காது நிற்கும் தூய தமிழ் இருதயங்கள்-உள்ளங்கள் திராவிட நாட்டில் எவ்வளவோ! பண்படுத்தி உழுது விதைத்து பராமரிக்கும் நிலத்தில் பலன் ஏன் இருக்காது? தமிழனின் மானத்தைப் பலிகொடுத்து அதனால் எதிரியின் சந்தோஷ ஆரவாரத்தைப் பெற்று, அந்த ஆரவாரத்தையும் விற்று, சம்பள ரூபமாக பெற நினைக்கும் அற்ப ஆசையை உடைய சில மனிதர்களும் தமிழ்நாட்டில் பிறந்தார்களே என்று நினைக்கும் போதுதான் உண்மைத் தமிழனின் இருதயம் ஒரு கணம் நின்று துடிக்கின்றது! இந்த நிலையில் சமூக நன்மையை வியாபாரமாக்க முயற்சிப்பவர்களைப் பற்றி ஆராய்ச்சி எதற்கு?

## புது உலகம்

தோழர் டி. ஆர். நடராஜனை ஆசிரியராகக்கொண்ட "புது உலகம்" என்ற வாரப்பத்திரிகை தமிழ்நாடு ராடிகல் டெமாக்ரடிக் கட்சியின் சார்பில் சென்னையிலிருந்து ஜூன் 17-ஆம் தேதி முதல் வெளியாகும்.

# திராவிட மாணவர் பிரசாரம்

திருநெல்வேலி: இப்பகுதியில் புலவர் கா. மு. மாணிக்கம், மாணவத்தோழர்கள் கி. தியாகராசன், ச. இராமசாமி ஆகியோர் சுற்றுப்பிரசாரம் செய்கின்றனர்.

11-5-45 சேர்மாதேவி மாவடித்தெருவில் முனிசிபல் கவுன்சிலர் தோழர் எ. அருணாசலம் தலைமையில் மாணவத் தோழர்கள் பேசினார்கள். தோழர் வசுதாசன் நன்றிகூறினார்.

12-5-45 திருநெல்வேலி மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளி விளையாடுமிடத்தில் ரிடையர்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தோழர் முத்தையா தலைமையில் மாணவத்தோழர்களும் தோழர் சமயபுரமும் பேசினார்கள். 'குமார விலாஸ்' தோழர் பிரமநாயகம் நன்றி கூறினார்.

13-5-45 திருநெல்வேலி நகர் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் தினகரன் ஆசிரியர் தோழர் மூர்த்தி தலைமையில் மாணவத்தோழர்களும் வேறு சிலரும் பேசியபின் தோழர் சிதம்பரநாதன் நன்றி கூறினார்.

14-5-45 களக்காட்டில் டாக்டர் சுப்ரமணியம் தலைமையில் கொண்டாடப்பட்ட வெற்றிவிழாவில் மாணவத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

17-5-45 நெல்லைத் திராவிடர் கழகத்தின் சார்பில் பாளையங்கோட்டை மார்க்கெட் மைதானத்தில் தோழர் முத்தையா தலைமையில் மாணவத் தோழர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் துரைசாமி நன்றி கூறினார்.

18-5-45 கல்லிடைக்குறிச்சி பாடசாலை வெளியில் தோழர் பீர் முகமது தலைமையில் மாணவத் தோழர்களும், பாவலர் பாலசுந்தரமும் சொற்பெருக்காற்றினர்.

19-5-45 மேலப்பாளையம் பாகிஸ்தான் மைதானத்தில் தோழர் முத்துக்கிருட்டிணன் தலைமையில் மாணவத் தோழர்கள் பேசினர். தோழர் சமயபுரம் நன்றி கூறினார்.

22-5-45 நடுவிற்பட்டி பிள்ளையார் கோவில் மைதானத்தில் எட்டயாபுரம் திராவிடர் கழகச் சார்பில் தோழர் ச. ராமசாமி தலைமையில் புலவர் கா. மு. மாணிக்கம், தோழர்கள் செல்லப்பா, கலிங்கன் ஆகியோர் பேசிய பின் தோழர் ஆத்தியப்பன் நன்றி நவின்றார்.

மேலும் கோவில்பட்டி பகுதியில் பிரசாரம் நடைபெறுகின்றது. தூத்துக்குடி நாகம்மாள் வாசகசாலையினரும் திருநெல்வேலி தோழர்கள் பிரமநாயகம், அருணாசலம், முத்தையா ஆகியோரும் மாணவர்களை வரவேற்று உபசரித்தது பாராட்டற்குரியதாகும்.

மதுரை: 21-5-45 சோளவந்தான் வைகையாற்றில் ஆசிரியர் கே. ராமசாமி தலைமையில் தோழர்கள் அ. பெரியசாமி, ஹமீபுல்லா, ராமானுஜம், முத்திருளாண்டி (அமெரிக்கன் கல்லூரி மாணவர்) கே. தியாகராசன், மதுரை சிவஞானம் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

திருச்சி: 11-5-45 தெற்குவாசல் திராவிடர் கழகச் சார்பில் தோழர் ஜனார்த்தனம் தலைமையில் தோழர்கள் சம்பத், குழந்தையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

14-5-45 பொன்மலை திராவிட வாலிபர் கழக தோட்டத்தில் காரைக்குடி தோழர் ராம. சுப்பையா தலைமையில் "திராவிடத் தொழிலாளர் கழகம் ஏன்" என்பது பற்றி தோழர்கள் தவமணி இராசன், ஜனார்த்தனம், சம்பத் ஆகியோர் பேசிய பின் தோழர்கள் என். நடராசன், எஸ். தங்கவேலு, ஜி. பரமசிவம், எ. கோவிந்தசாமி, எம். நாராயணசாமி ஆகியோரை முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகக்கொண்ட ஒரு திராவிடத் தொழிலாளர் கழகம் நிறுவப்பட்டது.

15-5-45 உறையூர் திராவிட இளைஞர் கழகத்தின் சார்பில் தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம். எ. தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், எ. கே. பாஷா, புலவர் அண்ணாமலை, புலவர் குழந்தையா முதலியோர் விரிவாகப் பேசினர்.

17-5-45 பிட்சாண்டார் கோவில் திராவிடர் கழகச் சார்பில் தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் மாணவத் தோழர்களான புலவர் குழந்தையா, சுப்பையா ஆகியோர் பேசினர்.

18-5-45 திருவளர் சோலையிலும் 19-5-45 சர்க்கார்பாளையத்திலும் புலவர் குழந்தையா தலைமையில் மற்ற மாணவத் தோழர்கள் பேசினர்.

சேலம்: இம்மாவட்டத்தில் தோழர்கள் இரெ. இளம்வழுதி, புலவர் நன்னன், தில்லை வில்லாளன், ஈரோடு இபுராகீம் ஆகிய தோழர்கள் பிரசாரம் செய்து வந்தனர்.

10-5-45 பாண்டமங்கலத்தில் தோழர் அண்ணாவி தலைமையில் மாணவத் தோழர்கள் பேசினர். தோழர்கள் சோமசுந்தரம், வீரப்பா முதலியோர் முயற்சி குறிப்பிடத்தக்கது.

12-5-45 வேலூரில் தோழர் இரா. நாவலடி தலைமையில் மாணவர்கள் விரிவுரையாற்றினார்கள்.

13-5-45 மேலூரையடுத்த நல்லியாம்பாளையம் கிராமத்தில் மாணவர்கள் பேசினர்.

14-5-45 தோட்டக்குறிச்சி தேவேந்திர வேளாள வாலிப சங்கத்தின் சார்பில் தோழர் கும்பகர்ணன் தலைமையில் மாணவத்தோழர்கள் பேசினார்கள். சங்கச் செயலாளர்நன்றி கூறினார்.

16-5-45 திருச்செங்கோட்டில் தோழர் பரமசிவம் தலைமையில் மாணவர் பேசினர். தோழர் என். கே. பி. வேல் நன்றி கூறினார். தோழர்கள் ஆறுமுகம், என். கே. பி. வேல், உயிர்மணி ஆகியோர் முயற்சி பாராட்டத்தக்கது.

17-5-45 நாமக்கல்லில் டாக்டர் அறிவானந்தன் தலைமையில் மாணவர்கள் பேசியபின் தோழர் கருப்பண்ணன் நன்றி நவின்றார்.

18-5-45 சேலம் அரிசிப்பாளையத்தில் தோழர் எ. பெருமாள் தலைமையில் மாணவத் தோழர்களும், தோழர் கே. வி. குப்புசாமியும் சொற்பொழிவாற்ற, தோழர் குருசாமி நன்றிகூறினார்.

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

ஜப்பானியரை ஒழிக்க!

ரேடியோ செய்திப்படி, நேசப்படைகள்,
நாளொன்றுக்கு ஒரு டிவிஷன் வீதம்
மேற்கிலிருந்து கிழக்குநோக்கி வந்துகொண்டிருக்கிறது.

★

இதனால்
துருப்புகளின் சௌகரியங்களுக்குத் தேவை எவ்வளவு
அதிகரிக்கிறது என்பதைச்சற்று எண்ணிப்பாருங்கள்!

ஆகவே
"துருப்புகளின் சௌகரியங்களுக்கு"
என்ற தலைப்பில்

மே. த. கவர்னர்

யுத்த நிதிக்கு
தயவுசெய்து பணம் கொடுத்துதவுங்கள்.

குடி அரசு

1945-ளு ஜூன் ஸ்ரீ 2உ

# யாருக்குக் கொள்கை இல்லை? யாருக்கு அரசியல் அறிவு இல்லை?

சென்னை மாகாணத்தில் பெருவாரியாய் இருக்கும் திராவிட மக்களாகிய நமக்கு நல் ஸ்தாபனமாகிய ஜஸ்டிஸ்கட்சி என்னும் திராவிடர் கழகத்திற்கு இன்று என்ன கொள்கை, என்ன திட்டம் என்பது யாரும் அறியாததல்ல.

என்றாலும் நம் எதிரிகளும் நம்முன் இருந்து நமக்குத் துரோகிகளாக ஆகி சுயநலம் காரணமாக விபீஷணாழ்வார்களாகவும் அனுமார்களாகவும் ஆனவர்களும் நமக்குக் கொள்கை இல்லை, திட்டம் இல்லை என்று சொல்லுவதோடு மாத்திரம் அல்லாமல் ஸ்தாபனம் இல்லை, அங்கத்தினர்கள் இல்லை என்றும் சொல்லி எதிரிகளுக்கு அனுகூலமாகப் பிரசாரம் செய்து எதிரிகளுக்கு நல்லபிள்ளைகளாகிக் கூலி பெறப் பார்க்கிறார்கள். இது ஆரியருடன் கலந்து போய்விட்டதாகக் கருதும் திராவிட மக்களுக்கும் கலந்ததனால் குற்றமில்லை என்று கருதும் திராவிட மக்களுக்கும் இயற்கையேயாகும். ஏனெனில், நம் ஸ்தாபனம், நம் கொள்கை, நம் திட்டம் முதலியவை யாவும் ஆரியர்களுக்கு எதிரானவையேயாகும். அப்படிப்பட்ட ஆரியருக்கு எதிரானதும் அவர்கள் நலத்துக்குக் கேடானதுமான கொள்கைகள், திட்டங்கள் ஆகியவை "ஆரியரும் நாமும் கலந்து விட்டோம்" அப்படிக் கலந்து அவர்களுக்கு அடிமையாயிருக்க ஆதாரமான 'இந்து மதத்தினராக இருப்பதைப் பற்றி நாங்கள் வெட்கப்படவில்லை' என்று துணிந்து சொல்கிறவர்களுக்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும்; ஆரிய எதிர்ப்பான இந்தக் காரியங்கள் ஒப்புக்கொள்ளவோ, சகிக்கவோ முடியாததேயாகும்.

நம் கொள்கைகள் என்னவெனில் முதலாவது நாம் வேறு, ஆரியர்கள் வேறு, நமக்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதாகும்.

அதனாலேயே தான் நம்மை நாம் தென் இந்தியர் என்று அழைத்துக்கொண்டு நம் ஸ்தாபனத்துக்கு தென் இந்தியர் நலத்தைக் கோரும், உரிமையைக் கோரும் சங்கம் என்றும், இச்சங்கத்தில் பார்ப்பனர்களை (ஆரியர்களை) அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றும், 20 வருஷங்களுக்கு முன்னதாகவே அதாவது ஜஸ்டிஸ் சங்கம் துவக்கப்பட்ட போதே குறிப்பிட்டுக்கொண்டிருப்பதோடு ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட அல்லது இந்து மதம் என்பதால் ஏற்பட்ட 'ஜாதிகளை அழித்து ஒரு இனமாக-ஒரு வகுப்பாக ஏற்படுத்துவது' என்னும் கொள்கையும் ஏற்படுத்தப்பட்டது. இது இன்றும் ஜஸ்டிஸ்கட்சி கொள்கையில் இருக்கிறது. இப்படி இருக்க, ஆரியரும் நாமும் கலந்துவிட்டோம்; பிரிக்கமுடியாதவர்களாக ஆகிவிட்டோம். ஆரியர் கொள்கையான அதாவது ஆரியர் உயர்வானவர்கள், திராவிடர்கள் தாழ்வானவர்கள், ஆரியர்களுக்குப் பிறந்தவர்களே திராவிடர்கள், என்னும் தன்மையை வற்புறுத்தி அமல் நடத்தும் இந்துமதமே நாம் பின்பற்றக் கூடியதாகும் என்பவர்கள் எப்படி இந்தத் தென் இந்தியர் நலத்தைக் காக்கும் ஸ்தாபனங்களில் அங்கத்தினராகவாவது இருக்க உரிமையுடையவர்களாவார்கள் என்பது கவனிக்கத்தக்கதாகும் என்பதோடு கொள்கை இல்லாதவர்கள், திட்டம் இல்லாதவர்கள், உண்மை தத்துவம் உள்ள கொள்கை இல்லாதவர்கள் என்பவர்கள் இப்படிப்பட்ட இவர்களா அல்லது வேறு யாராவதா என்பது எந்த சாதாரண மனிதனுக்கும் விளங்காமல் போகாது.

இதுவரை நம்மை தென் இந்தியர் என்று சொல்லி வந்து இன்றும் தென் இந்தியர் என்றால் பார்ப்பனரல்லாதவர் என்றும் சொல்லிக்கொள்ளுவதானால் பார்ப்பனரிடமிருந்து தாங்கள் பிரிந்தவர்கள் என்று காட்டிக் கொள்ள என்ன அடையாளத்தை, என்ன திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பாவது இல்லாமல் இருப்பவர்கள் தங்களை ஏதாவது கொள்கையோ திட்டமோ கொண்டவர்களாக கருத முடியுமா என்று கேட்கிறோம்.

"பார்ப்பனரல்லாதவர்களுக்குத் தனித் தொகுதி (ஓட்டுரிமை) கேட்பதும், பார்ப்பனரல்லாதவர்களுக்குத் தனி உத்தியோகமும் பதவியும் கேட்பதும்" ஆகிய இவற்றிற்கு மாத்திரமே ஒரு தனிக் கட்சி வேண்டுமானால் இப்படிப்பட்ட கட்சிக்கு சமுதாய சம்பந்தமாகவோ, அரசியல் சம்பந்தமாகவோ, ஏதாவது கொள்கை இருக்கிறது என்று எந்த அறிவாளியாவது கருதக் கூடுமா? அல்லது இப்படிப்பட்ட கட்சி "ஒரு அரசியல்கட்சி" என்று சொல்லிக்கொள்ளவாவது வெட்கப்படாமல் இருக்க முடியுமா? என்று கேட்கிறோம். ஏனெனில், மக்களைப் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்று எந்த அடிப்படையை வைத்து, எந்தப் பேதத்தை வைத்துப் பிரிப்பது என்பதற்கு இவர்கள் என்ன நிபந்தனை சொல்ல முடியும்? இவர்களிடம் என்ன இருக்கிறது?

உதாரணமாக தங்களை அரசியல் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும், சர் பி. டி. ராஜன் அவர்களும், தங்களைத் தங்கள் வகுப்பைப் பார்ப்பனர் அல்லாதார் என்று சொல்லிக்கொள்ள என்ன அடையாளம், அல்லது பேத நடத்தை, பேத உணர்ச்சி இருக்கிறது என்று கேட்கிறோம். இவர்கள் தங்களுடைய வகுப்பில் எந்தவிதத்தில் பார்ப்பனர்களைவிட மாறுபட்ட வகுப்பார்கள் என்று சொல்லிக்கொள்ள இடமிருக்கிறவர்களாவார்கள் என்று கேட்கிறோம். சர் ஷண்முகம் அவர்கள் வாணிய வைசியர், அல்லது பார்ப்பனர் தவிர மற்ற எந்த வகுப்பாரிடமும் புழங்காத, ஜலபானம்கூட செய்யாத வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பவர்களாவார்கள். சர் பி. டி. ராஜன் அவர்களும் பார்ப்பனரைவிட மற்ற எந்த வகுப்பாரிடமும் புழங்காத ஜலபானம் கூடச் செய்யாத உயர்ந்த வகுப்பா

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)
### 2-6-45ந் தேதி வரை 32719 அங்கத்தினர்கள் ரூ. 3248—4—0 சந்தா

ஜூன் மாதம் 2-ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5825 | 9. சென்னை | 1747 |
| 2. தஞ்சை | 5804 | 10. மதுரை | 1456 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 856 |
| 4. திருச்சி | 3950 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 192 |
| 5. இராமநாதபுரம் | 2293 | 13 பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2125 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1919 | | |
| 8. வட ஆற்காடு | 1828 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 32719. சந்தா ரூ. 3248-4-0

---

கனென்பவர்களாவார்கள். இவர்களிருவரும் தங்களைப் பொறுத்தவரை ஜாதியை வகுப் புயர்வைப் பாராட்டுவதில்லை என்று சொல்லப்படுமானால் தோழர்கள் சி. ராஜகோபாலாச்சாரியாரும் தோழர் டி. ஆர். வெங்கிட்டராமசாஸ்திரியாரும் கூடத்தான் ஜாதியைப் பாராட்டுவதில்லை என்பதோடு ஒருபடி மேலே சென்று பெண் கொடுப்பதிலும் பெறுவதிலும்கூட ஜாதி பாராட்டாமல் சமுதாய பழக்க வழக்கங்களில்கூட பார்ப்பனப் புரோகித உணர்ச்சியை பெரிதும் பாராட்டாதவர்களாவார்கள். அப்படி இருக்கும்போது அவர்களும் தங்களைப் பார்ப்பனர் அல்லாதவர்கள் என்றும், "பார்ப்பனராவது-அல்லாதாராவது எல்லாம் கலந்துவிட்டது" என்றும் சொன்னால் ஒப்புக்கொண்டு கட்சியைக் கலைத்துவிட வேண்டியதுதானா? அல்லது மற்ற மக்களாவது சர்க்காராவது ஒப்புக்கொள்ளுவார்களா? என்றுகேட்கிறோம்.

இந்துக்கள் என்றும், இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றும் இவர்கள் இந்த சர் ஆர். கே. எஸ்., சர் பி. டி. ஆர். ஒப்புக்கொண்டு தங்களைப் பார்ப்பனரல்லாதவர்கள் என்று சொல்லிக் கொண்டு தனித் தொகுதி, தனி உத்தியோகம் தனிப் பதவி கேட்பதற்கு உரிமை இருந்தால் இதே இந்துக்களில் மற்றொரு கூட்டத்தார் தங்களை வாணிய வைசியர்கள் அல்லாதவர், மற்றொரு கூட்டத்தார் தங்களை சைவ வேளாளர்கள் அல்லாதவர்கள், என்பனபோன்ற பல வகுப்புப் பேர்களைச் சொல்லிக் கொண்டு பகர் தொகுதியும் உரிமையும் பதவியும் கேட்பதில் குற்றமென்ன சொல்ல முடியும் என்றும் கொடுக்காமல் இருப்பதற்கு நியாயம் தான் என்ன சொல்ல முடியும் என்றும் கேட்பதோடு இந்து மதத்தை ஒப்புக்கொண்ட இவர்கள், அதில் கண்டபடியும் இந்துலா சட்டப்படியும் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, அவர்ண, பஞ்சம என்கின்ற வர்ணங்களின்படி இல்லாமல் "இந்து"க்களில் பார்ப்பனர்களை மாத்திரம் விலக்க என்ன நியாயம் என்று கேட்பதோடு, இப்படிப்பட்ட அதாவது இன்னது செய்வது என்றில்லாமல் ஓட்டுக்கும் உத்தியோகத்துக்கு மாத்திரம் கொள்கை கொண்ட இவர்களோடு மானமும் அறிவும் உள்ள எந்தத் திராவிடன் சேர முடியும் என்று கேட்கிறோம்.

இன்று நமக்கு எதிரே பார்ப்பனர் நம்மை இழிவுபடுத்தி வைத்திருக்கும் மதம், அதாவது நம் தோழர்கள் சர் ஆர். கே. எஸ்., சர் பி. டி. ஆர்., அவர்கள் தங்கள் மதம் என்று ஒப்புக் கொள்ளுகிற இந்துமதப்படிக்குத்தான் நம்மை தங்களுடைய வைப்பாட்டி மக்கள் என்று சொல்லுகிறார்கள். இந்து மதமும், மத சாஸ்திரமும், மதக் கடவுள்களும் அப்படியே சொல்லுகின்றன. அவைதப்பு என்றும் திராவிடராகிய நமக்கு அவை சம்பந்தப்பட்டவை அல்ல என்றும் நாம் சொன்னால், நம் தோழர் சர் ஆர். கே. எஸ். அவர்கள் "நாமும் பார்ப்பனர்களும் (ஆரியர்களும்) கலந்துபோய் விட்டோம். ஆரியராவது திராவிடராவது எல்லாம் கலந்துவிட்டது. இந்து மதத்தைக்குறைசொல்லக்கூடாது" என்று சொல்ல வந்தால் அப்போது பார்ப்பான் சொல்லுகிறபடி நாம் "சூத்திரர்கள்" என்பதையும் "அவர்களுக்குப் பிறந்தவர்கள்" என்பதையும் ஒப்புக்கொள்ளுவதுபோல் ஆகிவிடவில்லையா என்று கேட்கின்றோம்.

எதற்கு ஆக நாமும் அவர்களும் (திராவிடரும் ஆரியரும்) "பிறவியில் கலந்துபோய் விட்டோம்" என்று சொல்லவேண்டும் என்று கேட்கிறோம். நாமும் அவர்களும் பிறவியிலும் கலாச்சாரங்களிலும் கலந்துபோய்விட்டதாக ஒப்புக்கொண்ட பிறகு, ஒரு சமயத்தவர்களாகிவிட்ட பிறகு நமக்குத் தனித் தொகுதி, தனி உரிமை, தனி உத்தியோகம் எதற்கு ஆக வேண்டும்? அதைக்கொண்டு நாம் என்னசெய்ய வேண்டும்?, என்று கேட்கிறோம். நாம் கேட்காவிட்டாலும் இந்தக் கேள்வியைப் பார்ப்பனர்கள் கேட்கமாட்டார்களா, சர்க்கார் கேட்கமாட்டார்களா, 'தேசிய வாதிகள்' கேட்கமாட்டார்களா! அல்லது ஓட்டர்கள், பாமர மக்கள் கேட்கமாட்டார்களா என்று கேட்கிறோம்.

இவ்வளவு மானஉணர்ச்சியும் தெளிவும் ஏற்பட்ட இந்தக்காலத்திலும் இந்த அறிவாளிகள் தங்களையும், மற்றும் நம் மக்களையும் எதற்கு ஆக பார்ப்பனரல்லாதார் என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள் என்றும், அதே சமயத்தில் எதற்கு ஆக இந்துக்கள் என்று அழைத்துக்கொள்ளுகிறார்கள் என்றும் கேட்கிறோம்.

திராவிடன் என்று நம்மை நாம் அழைப்பதற்கு ஆதாரமில்லை என்றும், அப்படி அழைப்பது அவன் (ஆரியன்) கொடுத்த பெயரால் அழைத்துக்கொள்ளுவதாக ஆகும் என்றும், அது அவமானம் என்றும், கூறுகிற இவர்கள் பிறவியில் பார்ப்பனரோடு (ஆரியரோடு) கலந்துவிட்டவர்கள் என்றும், அதை வலியுறுத்தும் மதத்தைச்சேர்ந்த இந்து என்றும், 'பார்ப்பனர்களுக்குப்பிறந்தவர்கள் ஆனால் நாங்கள் பார்ப்பனர்கள் அல்ல" என்பது போல் பார்ப்பனர் அல்லாதவர்கள் என்றும், சொல்லிக்கொள்ளுவதானால் இவர்களுடனும் பல மொண்ணைகள் சேர்வதென்றால் இந்தக் கூட்டத்திற்கு மானம் வெட்கம் மறந்தாலது கடுகளவு இருக்கிறது என்று சொல்ல முடியுமா என்றும் நம்மை மற்றவர்கள் கூட்டத்திலும், சமுதாயத்திலும், மான உணர்ச்சியிலும் இழிமக்கள் என்று சொல்லுவதற்கு ஆதாரம் இல்லையா என்றும் கேட்கிறோம்.

நாம் ஏன் இதை விளக்கச் சொல்லுகிறோம் என்றால் இரண்டொரு கொள்கையற்ற சமயசஞ்சீவிகளுக்கு ஆக 4½ கோடிமக்களின் தன்மானம் இப்படிக் காற்றில் பறப்பதா என்பதற்கும், மந்திரி பதவியும் நிர்வாகசபை மெம்பர் பதவியும் கவுன்சிலர், பிரசிடெண்டு, புத்தக வியாபாரம், கண்ட்ராக்டு, சொந்தப் பிள்ளைகுட்டிகள், உத்தியோகம், கவர்மெண்டு வக்கீல், சில்லரைப் பதவி ஆகிய எச்சில் எலும்புத்துண்டுகள் 1, 2 கிடைப்பதாகும் இதற்கு ஆக பின்னால் வால்பிடித்து, வழிபாடுவதால் அறியப்படும் இரண்டு பிச்சைக்காரர்களுக்காக இவ்வளவு மானங்கெட்ட இனத்துரோக குலத்துரோக காரியத்திற்கு துணிவதா என்பதற்கும் நமக்கு கொள்கையில்லையா அல்லது இவர்களுக்கு கொள்கையில்லையா என்பதற்கும் ஆகவே குறிப்பிடுகிறோம்.

இவ்வளவு படித்த, இவ்வளவு செல்வம் படைத்த, இவ்வளவு பிரபலமான வாழ்வுக்கு எவர் தயவும் தேவை இல்லாத, தக்கவர்கள் என்று சொல்லப்படும்படியானவர்களே இப்படிப் பேசி பலனடையப் பார்த்தால் வாழ்வுக்கு மானமுள்ள வழியில்லாதவர்களும், வழிமுறையைத் தப்பாக உணர்ந்தவர்களும், அப்போரும் சந்ததிகளும் எப்படி நடந்து கொள்ளமாட்டார்கள் என்று கேட்கின்றோம்.

இன்று நமக்கு என்ன கஷ்ட நஷ்டம் வருவதானாலும் நாம் யார்? நம் எதிரிகள் யார்? நமக்கும் அவர்களுக்கும் என்ன என்ன பேதம்? அதனால் நாம் எப்படி எப்படிக்கெட்டோம்? இதிலிருந்து நாம் மீள என்ன என்ன செய்ய வேண்டும்? என்பவைகளே, தென் இந்திய திராவிடர் மக்களாகிய நமக்கு கொள்கையாகவும் திட்டமாகவும் மூச்சாகவும் இருக்கவேண்டியது அதுவுந் தங்களை உண்மை திராவிட மக்கள் என்று கருதுகிறவர்களுக்கும் இருக்கவேண்டும்.

அதற்கு ஆகத்தான் தென் இந்தியர் என்றால் திராவிடர்கள் என்று சொல்லுவதும், தென் இந்தியர் (நலவுரிமை) சங்கம் என்றால் திராவிடர் கழகம் என்பதும், நமது கொள்கை ஆரிய ஆதிக்க சம்பந்த மற்ற தனி நலன்கள் பெறுவது என்பதுமாகும்.

அதற்கு ஆகவே திராவிடநாடும், ஆரிய ஆதிக்கத்தை வலியுறுத்தி நம்மை ஆட்படுத்தியிருக்கும் இந்துமதம் நம்மில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதும், நம் அரசியல் சமுதாய இயல் தத்துவங்கள், திட்டங்கள், பிரசாரங்கள், மேடைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவைகள் எல்லாம்கூட இவைகளுக்கு ஏற்றவைகளாக இருக்கவேண்டும் என்பதுமாகும். திராவிடநாடுபிரிந்து கிடைக்க வேண்டும் என்பது மேற்கண்டவைகளோடு பொருளாதாரமும் ஏற்பட்டு மறுபடியும் எந்தக் காரணமும் கொண்டு இன்றைய இழிநிலைக்குப் போகாமல் இருப்பதற்கு அரண் கட்டுவதேயாகும்.

ஆகவே தோழர்களே நமக்குக் கொள்கையும், திட்டமும், இலட்சியமும் இல்லையா? அல்லது சர், திவான்பகதூர், ராவ்பகதூர், ராவ்சாயபு முதலிய கூட்டத்தினர்களின் கோஷ்டிக்கும் அவர்களது வால்களின், அடிமைகளின், கூலிகளின் கோஷ்டிக்கும் கொள்கையும், திட்டமும், இலட்சியமும், அரசியல் சமுதாய இயல், பொருளியல், அறிவும் இல்லையா என்று கேட்கிறோம். சுயநலக்காரருக்கு, ஆரியருக்கு வருத்தம் தரும்படியான எந்தத் திட்டமும் பிடிக்காது. ஆதலால் ஆரியர்களுக்குப் பயந்து சுயநலத்தைக் கருதிபோனவர்கள் போகட்டும்! போகிறவர்கள் போகட்டும்!! போகவேண்டியவர்களும் போகட்டும்!!!

மற்றவர்கள், மானமுள்ளவர்கள், மான இலட்சியமுள்ள வீர இளைஞர்கள், தன்னலமற்ற திராவிடப் பொதுமக்கள் ஒரு நிலையில் இருந்து சிறிதுநாட்களுக்குத் தொண்டாற்றினால் போதும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 27-5-45-ந் தேதி ஞாலூர் திருமணம், பொதுக் கூட்டம் ஆகியவைகளுக்குச் சென்றுவிட்டு 28ந் தேதி சென்னை சென்று 31-ந் தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்தார். பெரியார் அவர்கள் உடல்நிலை இன்னும் சரியில்லாததால் 3-6-45-ந் தேதி திருச்செங்கோடு சென்றுவிட்டு மீண்டும் ஏற்காட்டிலே சில நாட்களுக்கு ஓய்வு எடுத்துக்கொள்வார்கள் போல் தெரிகிறது.

## திருமணம்

திருக்கோஷ்டியூர் டாக்டர் நா. நமசிவாயம் அவர்கள் குமாரன் தோழர் தக்ஷணாமூர்த்திக்கும் தஞ்சாவூர் கரந்தை டாக்டர் குப்புசாமி பிள்ளை குமாரத்தி தோழர் ருக்மணிக்கும் 7-6-45-ந் தேதி காலை 10 மணிக்கு மேல் திருமணம் நடைபெறும்.

## சிறுகனூர் திராவிட கழகம்

நான்காம் ஆண்டு நிறைவுவிழா

7-6-45-ந் தேதி இரவு 9 மணிக்கு மேல் கிராமச் சாவடிக்கு முன்னால் மேற்படி விழா நடைபெறும்.

தலைவர் டி. பி. வேதாச்சலம் பி. ஏ., பி. எல்., தோழர் கே. ஏ. குஞ்சிதபாதம் பி. ஏ., 'திராவிடர் நிலை' என்பது பற்றிப் பேசுவார்கள். மற்றும் பல நம் இயக்கத் தோழர்கள் அப்போது சொற்பொழிவாற்றுவார்கள்.

# போலிகளின் போலி மாநாட்டின் நடவடிக்கைகள்

(வேலூரான்)

சென்ற மலருக்கு முந்திய மலரில் 'கவனித்தவன்' எழுதிய விவரங்களை மிகவும் கவனமாகப் படித்தேன். 'கவனித்தவன்' வடஆற்காடு மாவட்டத்தைப்பற்றிக் கவனிக்காததற்காக அவர் கவனக்குறைவிற்காக வருந்துகிறேன். அவர் தாட்சண்யம் கருதி வ. ஆ. ஜில்லாவை மறந்துவிட்டிருந்தாலும் இருக்கலாம்.

'ச. அ.' பத்திரிகையில் காணப்படும் நபர்களின் பெயர்களிலிருந்து வடஆற்காட்டிலிருந்து அந்தப் போலி மாநாட்டில் 'ஏராளமான பிரதிநிதிகள்' கலந்துகொண்டதாக விஷயமறியாதார் அறிந்துகொள்ள வேண்டியநிலைமை ஏற்படுகிறது.

வடஆற்காட்டில் புதுவதாக நிறுவப்பெற்ற பெயர் மாறுதல் வேண்டாத தெ. இ. ந. உ. சங்கத்தின் தலைவர் தோழர் வி. கிருஷ்ணாரெட்டி பி. ஏ., பி. எல்., ஏன் கலந்துகொள்ளவில்லை? ஏதோ அவசரமான வேலை முன்னிட்டுப் போலிகளின் கூட்டத்தில் கலந்துகொள்ள அவர் விரும்பவில்லை என்றே வைத்துக்கொண்டாலும், ஒரு 'பாராட்டுத் தந்தி'யையாவது அன்னார் அனுப்பியிருக்கக் கூடாதா? இதிலிருந்து அந்த ஜில்லாவின் தலைவருக்கே போலிகளின் நாடகத்தில் நம்பிக்கையில்லை என்பது தெரியப்படுகின்றதாதலால், மற்றவர்கள் ஆயிரம் பேர் கலந்துகொண்டால் தான் என்ன?

தவிர, தோழர் வீரபத்திர முதலியார் என்பவரும் பிரதிநிதிகள் பட்டியில் காணப்படுகிறார். தோழருக்குத் திடீரென்று போலிகள் கட்சியில் 'காதல்' ஏற்பட்டிருக்கக்கூடும் என்று நினைப்பதற்கில்லை. ஏனெனில், சென்ற மாதத்தில் திருப்பத்தூரில் நடைபெற்ற திராவிடர்கள் பூர்வாங்கக் கூட்டத்தில் தான் வ. ஆ. ஜி. திராவிடர் கழகத்தின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவரும் அக்கூட்டத்தில் உணர்ச்சியுடன் கலந்துகொண்டு தமது சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறார். போலிகளின் மாநாட்டில் தோழர் வீரபத்திர முதலியாரும் காணப்பட்டார் என்ற செய்தி உள்ளபடியே உண்மையென்றால், "போலிகள் எவ்வாறுதான் நாடகம் நடிக்கிறார்களோ, பார்ப்போம்", என்ற ஒருவித பரிகாச உளப்பாங்குடன் தான் அவர் கலந்துகொண்டிருக்க வேண்டும்!

வடஆற்காடு ஜில்லாவில் பல ஆண்டுகளாக திராவிடர் தலைவராக இருந்த தோழர் ஜி. சாமி நாயுடு பி. ஏ., பி. எல்., அவர்களும் அந்த மாநாட்டிற்குச் சென்றிருந்ததாகக் காணப்படுகிறது. புலன் விசாரித்த பிறகு, அவர் பார்வையாளராகத்தான் மாநாட்டிற்குச் சென்றிருந்தாரேயல்லாது, பிரதிநிதியாகச் செல்லவில்லையாம். 'டெலிகேட் டிக்கட்" அவர் வாங்கவில்லை. இருந்தும் பொய் பேசுவதில் வல்ல ச. அ. பத்திரிகை பார்வையாளராக வந்த தலைவரை 'டெலிகேட்'டாகவே நினைத்துக்கொண்டது.

இறுதியாக ஒரு செய்தி. கூலி பத்திரிகைகளில் வெளிவருகிற செய்திகள் பெரிதும் புனைந்துரையே! அவற்றைக்கண்டு ஆறறிவு படைத்த திராவிடர் ஏமாந்துவிடக்கூடாது.

ஏதாவது ஒரு ஜில்லாவில் பட்டதாரிகளின் பகல் வேடம் ஓரளவு செல்லுபடி ஆவதாக இருந்தாலும், அது நிச்சயம் வடஆற்காடு ஜில்லாவில் நடைபெற முடியாது!


நீங்கள் அவசியம் படிக்கவேண்டிய புத்தகம்.

## திரு. என்.எஸ். கிருஷ்ணன்

### சிறந்த மேதாவி



வானத்தில் மின்னல் உருகிப் பாய்வதுபோல் ஒவ்வொரு திராவிடர் உள்ளத்திலும் உருகிப் பாயவேண்டும்! அதுவே எங்கள் மனதில் கிளம்பிய எழுச்சியும் உறுதியும்.

மாஜி நவயுகம் (தினசரிப் பத்திரிகையின்) ஆசிரியரும், சிறந்த எழுத்தாளருமான தோழர் வ. ரா. அவர்கள் எழுதியது. அழகிய புத்தகம் குறைந்த விலை 0–2–0 உடன் எழுதுக.

ஏஜண்டுகள் தேவை

திராவிடன் பதிப்பகம்,
133–லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)


## மாணவத் தோழர்கள்

தோழர்கள் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., புலவர் நன்னன், திருவத்திபுரம் தேவராசன் ஆகியவர்கள் வடஆற்காடு மாவட்டத்தில் 7-6-45 முதல் 26-6-45 முடிய சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். சில கூட்டங்களில் பெரியார் அவர்களும் கலந்துகொள்வார். அவர்களின் பிரசாரத் திட்டம் பின்வருமாறு:

7-6-45 புதுப்பாளையம்
8- செங்கம்
9- பேணாம்பட்டு (திருப்பத்தூர்)
10- திருப்பத்தூர்

(மற்ற ஊர்களின் விபரம் பின்னர் வரும்)

ஆங்காங்குள்ள தோழர்கள் பிரச்சாரத்திற்கு வரும் மாணவர்களை வரவேற்று அனுப்புவதற்கு வேண்டிய பொருள் வசூல்செய்து ஆவன செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விபரங்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

பி. எம். ராஜமாணிக்கம்,
திராவிடர் கழகம்,
திருப்பத்தூர், (N. A.)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

19-5-45 சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தில் டாக்டர் கே. ஆர். கோபால் தலைமையில் மாணவர்கள் பேசினர். தோழர் எம். பி. சுப்ர மணியம் நன்றி கூறினார்.

20-5-45 எர்ரகாட்டில் தோழர் வி. டி. இராசு தலைமையில் மாணவர்கள் பேசினர். தலைவர் பெரியாரவர்களும் கலந்துகொண்டு 2½ மணி நேரம் சொற்பொழிவாற்றினார். தோழர் ஜான் நன்றி கூறினார்.

23-5-45 சேலம் அம்மாப்பேட்டையில் தோழர் ஸ்டாலின் ராமசாமி தலைமையில் மாணவர் பேசினர்.

24-5-45 சேலம் பொன்னம்மாப் பேட்டையில் தோழர் கே. வி. குப்பு சாமி தலைமையில் மாணவர் சொற்பொழிவாற்றினர்.

25-5-45 புதூர் கிராமத்தில் தோழர் சீரங்கம் தலைமையில் மாணவர் பேசினர்.

27-5-45 காலை 10 மணிக்கு சேலம் தேவாங்கப் பாடசாலையில் தோழர் கே. கிருஷ்ணசாமி (எம். சி.) தலைமையில் தோழர் ஜனார்த்தனம் தெலுங்கிலும், மற்ற மாணவத் தோழர்கள் தமிழிலும் பேசினர். தோழர் எம். எல். தமிழ் மணி நன்றி கூறினர்.

28-5-45 சேலம் விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் ஒலி பெருக்கியுடன் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் கே. ஆர். கோபால் எம். ஐ. எம். தலைமையில் சுற்றுப்பிரயாண மாணவர்களும் தோழர் ஜனார்த்தனமும் முதல் நாள் நடந்த கம்யூனிஸ்ட் பொய்ப் பிரசாரத்திற்குச் சூடான, சரியான பதிலளித்தது மக்கள் ஏமாறாமலிருக்கக் கேட்டுக் கொண்டனர். தோழர் கே. வி. குப்புசாமி இன்னிசை வழங்கினார். தோழர் எம். பி. சுப்ர மணியம் நன்றி கூறினார்.

சேலம் மாவட்டச் சுற்றுப்பிரயாணம் இத்துடன் முடிவடைந்தது. இதை வெற்றிகரமாய் நடத்திக்கொடுத்த தோழர்கள் நடேசன், எம். பி. சுப்ரமணியம், எம். எல். தமிழ்மணி, கே. வி. குப்புசாமி ஆகியோருக்கு சுற்றுப்பிரயாண மாணவர் சார்பாக எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்னார்காடு (கடலூர், விழுப்புரம், திண்டிவனம் பகுதி.)

16-5-45 கல்லப்பரெட்டியார் பாளையத்தில் தோழர் ப. பீட்டர் பி. ஏ., தலைமையில் புலவர் விண்ணார்தாயனார், தோழர் இளவழகன் ஆகியோர் பேசினர். தோழர் முத்துசாமி நாயுடு உணவளித்து உபசரித்தார்.

18-5-45 காவேரிப்பாக்கம் தோழர் குப்புசாமி தலைமையில் புலவர் விண்ணார்தாயனார், தோழர்கள் இளவழகன், இளஞ்சண்ணன் ஆகியோர் பேசினர்.

19-5-45 திண்டிவனம் மூன்றாம் தல் சவுக்கில் தோழர் கா. வெங்கடேசன் தலைமையில் புலவர் விண்ணார்தாயனார், இளவழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்.

20-5-45 தாதாபுரத்தில் தோழர் கே. ஆதிகேசவன் தலைமையில் திராவிடர் கழகம் திறக்கப்பட்டது. இரவு 9 மணிக்கு தோழர் ஆதிகேசவன் தலைமையில் தோழர் பாலகிருஷ்டினன் பாடினார். புலவர் விண்ணார்தாயனார், இளவழகன் பேசினர். தோழர் கோதண்டராமன் நன்றி கூறினார்.

21-5-45 அவலூர்பேட்டையில் தோழர் சனாதன் தலைமையில் நடந்த கூட்டத்திலும், 22-5-45 பருக்கரிவானர் நிலையத்தில் நடந்த கூட்டத்திலும் புலவர் விண்ணார்தாயனார், தோழர் இளவழகன் இருவரும் சொற்பொழிவாற்றினர்.

23-5-45 கடலூரில் தோழர்கள் இராமதாசுக்கும், சாசுலக்ஷிக்கும் நடந்த திருமணத்தில் புலவர் விண்ணார்தாயனார், தோழர்கள் திராவிடமணி, வள்ளலார் ஆகியோர் "திருமணப் புரட்சி" பற்றிப் பேசினர்.

இப்பகுதிகளில் கூட்டம் நடத்தியுதவிய தோழர்களுக்கு கடலூர் ஆ திராவிடமணி பி. ஏ., தம் நன்றி தெரிவிக்கிறார்.

(விருத்தாசலம், கல்லக்குரிச்சி பகுதி)

23-5-45 பெண்ணேரியில் புலவர் முத்தழகன் தலைமையில் தோழர்கள் இராசாங்கம், வீரமணி, கலியபெருமாள், புலவர் எழில் இலவன் ஆகியோர் பேசினர்.

24-5-45 செயங்கொண்டத்தில் தோழர் பாஸ்கரன் தலைமையில் புலவர்கள் விண்ணார்தாயனார், எழில் இலவன் தோழர்கள் திராவிட வீரன் வீரமணி முதலியோர் சொற்பெருக்காற்றினர்.

ஷை பிரசாரக் கூட்டங்களில் எல்லாம் 7, 8-5-45ல் சென்னையில் சர் ஆர். கே. சண்முகம் தலைமையில் நடந்த போலி ஜஸ்டிஸ் மாநாட்டைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(தொடரும்)

## திராவிடர் பொதுக்கூட்டம்

10-6-45 ஞாயிறு மாலை 6 மணிக்கு செஞ்சி தாலுகா அவலூர்பேட்டையில் திராவிடர் பொதுக்கூட்டம் நடைபெறும். அறிவேபழுத்த தமிழர் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. 'திராவிட நாடு' ஆசிரியர் அவர்களும், தோழர்கள் பேரளூர் கே. சுப்ரமணியம், மாயவரம் எஸ். வி. லிங்கம் ஆகியவர்களும் "தற்கால திராவிடர் நிலை" என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

## சித்தவைத்திய மாநாடு

தமிழ் மாகாண சித்தவைத்திய மூன்றாவது மாநாடு ஜூன் 9, 10 தேதிகளில் மாயவரம், திருவிழந்தூரிலிருக்கும் பல்லவராயப்பேட்டை தருமபாலக் கட்டிடத்தில் நடைபெறும். ஈரோடு வைத்திய வள்ளல் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் சித்தர் கொடியை ஏற்றிவைப்பார். தோழர் வி. நாடிமுத்துப் பிள்ளை மாநாட்டைத் திறந்து வைப்பார். தோழர் கஸ். ஜி. சுந்தரம் பிள்ளை மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார். பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## திருமணம்

ஆசிரியர் ஜி. எஸ். பழனிவேல் குமரர் பி. அம்பிகாபதிக்கும் திருப்பத்தூர் அண்ணான்பட்டி கிராமம் பெரியசாமி அவர்கள் குமாரத்தி பி. கமலம் அவர்கட்கும் ஆசிரியர் கே. எஸ். தங்கவேல் அவர்கட்கும் செல்லிக்குப்பம் சேழுவல்லி குப்புசாமி அவர்கள் குமாரத்தி சகுந்தலா அவர்கட்கும் 7-6-45-ந் தேதி சர்வை புதுப்பாளையம் கிராமத்தில் திருமணம் நடைபெறும்.

## ராடிகல் மாநாடு

தமிழ்நாடு ராடிகல் டெமாக்ரடிக் கட்சியின் முதலாவது மாகாண மாநாடு சென்னையில் ஜூலை மாதம் 14, 15 தேதிகளில் நடைபெறும்.


## மூன்று கடிகாரங்களும் 450 வெகுமதிகளும் இனும்
(5 வருட உத்தரவாதம்)



ரூ. 3-10-0 விலையுள்ள புதிய நறுமண ஆட்டோரோஸ் ஒரே தடவையில் 3 புட்டிகள் வாங்குவோருக்கு இனமாக ஒரு நிக்கல் கேஸ்டம்பி கைகடிகாரம், 1 டார்ச்லைட், 1 பவுண்டன்பேனா, 1 பிரஷ், 1 சோப், 1 சிறிய அளவுடின் பொம்மை மேஜை கடிகாரம், 1 பட்டன், 1 பேனாக்கத்தி, 4 கைகுட்டை, 1 கத்தரிக்கோல், 1 மோதிரம் மற்றும் 440 அழகான வெகுமதிகளும் அல்லது உறுதியான யந்திரங்களுடைய ஒரு பாக்கெட் கடிகாரம். பாக்கிங் தபால்சார்ஜ் 14 அணா பிரத்யேகம்.

THE IMPERIAL WATCH Co.,
P. B. No. 12211, Calcutta.
(K. D.)

# திராவிட நாட்டுச் செய்திகள்

சேலம்ஜில்லா பென்னாகரத்தில் 12-5-45ந் தேதி வெற்றிவிழா டிபுடி தாசில்தார் ஆபீஸ் கட்டிடத்தில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் வி. எம். எப். எம். ராஜகோபால் நாயுடுவும், திருப்பூர் மார்ப்பிள்ளை செட்டியாரும் முக்கிய பங்கெடுத்துக்கொண்டார்கள்

* *

பனமரத்துப்பட்டி ஆதிதிராவிட வாலிபர் கழகம் 1-5-45ந்தேதி தோழர் பி. மதுரைப்பிள்ளை தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

* *

14-4-45ந் தேதி கொழும்பு, திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் ஆதரவில் டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள்விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

* *

ஷை சங்கத்தின் கல்வி நிதிக்காக 9-4-45ந் தேதி உள்நாட்டு மந்திரி தோழர் எ. மஹாதேவா அவர்கள் தலைமையில் சங்கீதம், உடற்பயிற்சி விளையாட்டுகள் நடைபெற்றன. வரவு ரூ. 2005.50 சதம்; செலவு ரூ. 501.30; மீதி ரூ 1504.20.

* *

மதுரைத் தோழர் இரா. சத்தியேந்திரன் தாயார் தோழர் இராமலக்ஷ்மி காலமானதை முன்னிட்டு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாக மதுரை திராவிட தொண்டர் படையின் சார்பில் காரியதரிசி தோழர் பி. துரைராஜ் தெரிவிக்கிறார்.

* *

சென்னை தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் (பெரம்பூர் பாராக்ஸ் கிளை) அங்கத்தினர் பொதுக்கூட்டம் 6-5-45-ல் தோழர் எம். துருவையா தலைமையில் நடந்தது. வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

வேலூர் இசைவேளாளர் சங்கக் கூட்டம் 9-5-45-ந் தேதி தோழர் டி. என். ராஜரத்தினம் தலைமையில் கூடி வெற்றி விழாக்கொண்டாடப்பட்டது.

* *

திருப்பத்தூர் (வ. ஆ.) பெற்றோர் சங்க ஆண்டு விழா முனிசிபல் கமிஷனர் தோழர் ஜி. சீனிவாசன் பி. ஏ., தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

* *

தூத்துக்குடி அழகேசபுரம் வாலிபர் சங்கத்தின் 4-வது ஆண்டு விழா தோழர் எ. கே. ஞானமுத்து தலைமையில் கொண்டாடப்பட்டது. 9-5-45ல் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

திருநெல்வேலி டவுன் ஷெடியூல் வகுப்பார் பொதுக் கூட்டம் 1-5-45-ந் தேதி தோழர் பி. ஜான் தாமஸ் தலைமையில் கூடியது. ஷை டவுனில் ஷை ஸ்தாபனத்தை நிறுவவேண்டுமென்றும் இதுசம்பந்தமான காரியங்களை தோழர்கள் எஸ். சிவகுருநாதன், எஸ். எம். சிதம்பரநாதன் ஆகியவர்கள் கவனித்து வரவேண்டுமென்பதும் தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

பம்பாய் தாராவி திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் மாதாந்திரக் கூட்டம் 29-4-45-ல் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடந்தது. பம்பாயில் நடைபெறவிருக்கும் ஷெடியூல்டு கிளாஸ் பெடரேஷன் மாநாட்டுக்கு வரும் ராவ்பகதூர் என். சிவராஜ் அவர்களுக்கு வரவேற்பளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

* *

29-4-45 தோழர் எ. எஸ். இராசு தலைமையில் நடந்தேறிய கோலார் தங்கவயல் சேம்பியன் ரீப் சமாச ஷெடியூல்டு வகுப்பினர் கழகக் கூட்டத்தில், சென்பிரான்சிஸ்கோ மாநாட்டிற்குத் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதியை அழைக்காததற்கு வருந்துவதாகவும், சென்னை ராவ்சாகிப் வி. தர்மலிங்கம் பிள்ளையின் திடீர் மரணத்திற்கு வருந்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

இசைவேளாளர் மாபெரும் கூட்டம் சிக்கலில் 29-4-45-ந் தேதி கூடியது. தஞ்சை ஜில்லா இசைவேளாளர் மாநாடு கூட்டவேண்டிய அவசியம் பற்றி வற்புறுத்தப்பட்டு ஆடி மாதம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

* *

திருச்சி தோழர் டாக்டர் க பிச்சைமுத்து அவர்களின் மாமியார் முருவாயி அம்மாள் மறைவின் நினைவாக தோழர் எ. வி. பெரியண்ணன் தலைமையில் நீத்தார் கடன் நடத்தப்பட்டது. பல தோழர்கள் பேசியபின், திருச்சி மருத்துவசங்கத்திற்கு ரூ. 3ம் 'குடி அரசு'க்கு ரூ. 1ம் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

தூத்துக்குடி அருந்ததியார் சமூக சீர்திருத்த சங்க முதலாவது ஆண்டுவிழா 29-4-45ந் தேதி தோழர் எஸ். ஏ. மத்தேயு அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர் டி. ஆசீர்வாதம் வரவேற்றார். தோழர் எ. செல்வராயகம் கொடியேற்றினார். பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

வேலாயுதம்பாளையம் கூட்டுறவு பண்டகசாலையின் இரண்டாவது ஆண்டுவிழா ராவ்சாகிப் எல். என். பரமசிவம்பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. தலைவருக்கு வரவேற்புத் தாள்கள் வாசித்தளிக்கப்பட்டன. சேலம் ஜில்லா பாங்கு காரியதரிசி தோழர் பி. மாணிக்க முதலியார் கூட்டுறவை விளக்கிப் பேசினார்.

* *

சிப்னாப்புத்தூர் தமிழர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 11-5-45ந் தேதி தோழர் மா. கருப்பண்ண ஆச்சாரியார் தலைமையில் கூடியது. பல தோழர்கள் "கல்வியின் அவசியம் பற்றி" பேசினார்கள்.

* *

பட்டுக்கோட்டை தமிழ் மருத்துவ குல சங்க ஆண்டு விழா 11-5-45-ந் தேதி கமலம்மையார் தலைமையில் கொண்டாடப்பட்டது. பலதோழர்களால் தமிழும் மருத்துவமும் என்பது பற்றி பேசப்பட்டது.

* *

தூத்துக்குடி அருந்ததியார் சமூக சீர்திருத்த சங்க நிர்வாகஸ்தர் கூட்டம் 13-5-45-ந் தேதி தோழர் எம். இருளையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. வேதமுத்து தலைவராகவும், எஸ். கணபதி காரியதரிசியாகவும், மற்றுமுள்ள நிர்வாகஸ்தர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்

* *

கரூர் தாலூகா தோட்டக்குறிச்சி தேவேந்திர வாலிபர் சங்க பொதுக் கூட்டம் 15-5-45-ந் தேதி தோழர் குமாரவேல் தலைமையில் நடந்தது. பல தோழர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

* *

திருச்சி நகர மண்டபத்தில் 28-4-45ந் தேதி தோழர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் மருத்துவகுல நிர்வாக சபை நடைபெற்றது. மாவட்டத்திற்கு இரண்டு பிரதிநிதிகள் வீதம் மத்தியசபைக்கு 11மாவட்டத்துக்கு 22 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. மாநிலத் தலைவராக பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களும், செயலாளராக புரபசர் நடராஜ பகவதி பி. ஏ., (ஹானர்ஸ்) அவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

சென்னை,

திருநீர்மலை ஷெடியூல்டு வகுப்பு நலவுரிமைச் சங்கம் 29-4-45-ந் தேதி தோழர் என் சண்முகம் தலைமையில் கூடியது. தோழர் எம். எஸ். முத்து அவர்கள், வாசகசாலையையும் திருநீர்மலை ஷெடியூல்டு வகுப்பு சங்கத்தையும் திறந்துவைத்துப் பேசினார்.

* *

திருச்சி ஜில்லா லேபர் அட்வைசரி மெம்பர் டாக்டர் டி. டி. ராஜன் தலைமையில் குமாரவயலூரில் 19-5-45ந்தேதி

ரோஜா முத்தையா

வெற்றிவிழா கொண்டாடப்பட்டு ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷன் நிறுவப்பட்டது.

* *

பசுமாத்தூர் ஷெடியூல்டு வகுப்பார் சார்பில் தோழர் ஜி. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கொள்கையை ஆதரித்து பல தோழர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் தாழ்த்தப்பட்டோர் டாக்டர் அவர்களையே பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

* *

பம்பாய், தாராவி திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் இரண்டாம் ஆண்டுமுதல் பிரசாரக்கூட்டம் 20-5-45 தேதி ஆத்துக்குடி தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

* *

கரூர் தாலுகா செவந்திபாளையம் கிராமத்தில் தோட்டக்குறிச்சி தேவேந்திர வாலிபர் சங்கப் பொதுக் கூட்டம் தோழர் முத்துச்சாமி தலைமையில் 17-5-45-ஆம் தேதி நடைபெற்றது.

* *

14-5-45 விழுப்புரத்தில் நாகை திராவிட நடிகர் கழகத்தின் சார்பில் டாக்டர் டி. தியாகராசன் தலைமையில் வெற்றி விழாக்கொண்டாடப்பட்டது. தோழர்கள் ஆர். வி. கோபால், மு. கருணாநிதி திரவி. சோ. இரத்தினவேலு ஆகியவர்கள் பேசினார்கள்.

* *

மாயவரம் தாலுகா தாழ்த்தப்பட்டோர் முதலாவது மாநாடு அருவளூரில் 5-5-45-ந் தேதி தோழர் எஸ். கோவிந்தராவ் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். எச். துரைசாமி மாநாட்டைத் திறந்துவைத்தார். பேபி ரஷ்யா சமூக சீர்திருத்தப் பாடல்கள் பாடிய பின் தலைவர் சொற்பொழிவு நிகழ்ந்தது. சமூக முன்னேற்றத்தைக் குறித்து பல தீர்மானங்கள் நிறைவேறின.

* *

திருச்செங்கோடு தாலூகா சமுத்திரம் ஆதிதிராவிட வாலிபர் சங்கத்தினரால் 14-5-45ந் தேதி வெகு சிறப்பாக வெற்றி விழா கொண்டாடப்பட்டது.

* *

பொன்மலை திராவிட இளைஞர் கழகத்தின் சார்பில், சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்ட தோழர் ஏ. யு. பாஷா அவர்களுக்கு 6-5-45-ந் தேதி தோழர் டபுள்யு. டி. ரெங்கராஜு செட்டியார் தலைமையில் ஓர் வாழ்த்துப் பத்திரமும் தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது. மணமக்களைப் பாராட்டி பல தோழர்கள் பேசினார்கள், மணமக்களுக்கு கந்தண்டார்கோட்டை திராவிடர் கழகத்தின் சார்பில் மலர் மாலை சூட்டப்பட்டது.

* *

திருவெற்றியூர் செட்டியூல்டு வகுப்பு பெடரேஷன் சார்பில் 19-5-45-ந் தேதி சென்னை தோழர் ஏ. எம். சண்முகம் தலைமையில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது.

* *

பம்பாய் தெ. இ. ஆ. தி. வாலிபர் கழகத்தின் 8-வது ஆண்டுவிழா 9-5-45-ந்தேதி தோழர் மீனாம்பாள்-சிவராஜ் தலைமையில் நடைபெற்றது. பம்பாயில் நடைபெற்ற அ. இ. செடியூல்டு வகுப்பு பெடரேஷன் 3-வது மாநாட்டையும், தீர்மானங்களையும் ஆதரிப்பதாயும் ராவ்சாகிப் எம். தருமலிங்கம் பிள்ளை மரணத்திற்கு வருந்துவதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சங்கரன்கோவில் நெசவாளர் மனு

சங்கரன் கோவில் கைத்தறியாளர்கள் தங்களுக்கு போதிய நூல் தடங்கள் இன்றி சப்ளை செய்யவும் ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படாமல் இருக்கிற தறிகளுக்கும் ரேஷன் கார்டுகள் கொடுக்கவும் கள்ள மார்க்கட்டிற்கு அனுகூலமாக இருக்கிற கலர் நூல் லைசன்ஸை மாற்றி வெள்ளை நூலாகக் கொடுக்கவும்வேண்டி 8-5-45-ல் நெசவாளர்கள் நெல்லை டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆபீஸர் அவர்களுக்கு ஓர் மனு கொடுத்துள்ளார்கள்.

சங்கரன் கோவில் நூல் வினியோகக் கமிட்டியை நெல்லை ஜில்லா டெக்ஸ் டைல் கண்ட்ரோலர் கலைத்துவிட்டார்.

## மன்னார்குடி சுயமரியாதைச் சங்கம்

மன்னார்குடி 12-5-45-ல் நடந்த கோவாப்பரேடிவ் அர்பன்பேங் டைரக்டர்கள் கூட்டத்தில் மன்னார்குடி தாலூகா சுயமரியாதைச் சங்கக் கட்டடத்தில், கேணி ஒன்று வெட்டுவதற்காக டைரக்டர்கள் பண்டிலிருந்து தாலூகா சுயமரியாதைச் சங்கத்திற்கு கே. ஆர். ஜி. பால் வேண்டுகோளின் பேரில் ரூ. 125 நன்கொடை அளிக்கப்பட்டது. இத்தாராள சிந்தைக்கு டைரக்டர்களுக்கு தமது வந்தனம் உரித்தாகுக என தோழர் கே. ஆர். ஜி. பால் தெரிவிக்கிறார்.

## வ. ஆ. ஜில்லா திராவிடர் கழகம்

### அறிக்கை

வ. ஆ. ஜில்லா திராவிடர் கழகத் (ஜஸ்டிஸ் கட்சி) திற்கு ஜில்லாவின் பல தாலூகாக்களிலும் கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுத்து அவர்கள் யாவருக்கும் தபால் மூலம் தெரியப்படுத்தி இருக்கிறது. ஜில்லா கமிட்டி மெம்பர்களின் வருட சந்தா 5-0-0 ஐந்து ரூபாயை இதுவரை அனுப்பாத அன்பர்கள் தங்கள் சந்தா தொகையை சீக்கிரம் அனுப்பவேண்டுமாயும் இன்னும் கமிட்டிக்கு மெம்பர்களாகச் சேர விரும்புபவர்கள் ஜில்லாக் கமிட்டித் தலைமை நிலையத்திற்கு எழுதி சேர்ந்து கொள்ளவேண்டுமாயும், இந்த ஜில்லாவின் பல தாலூக்காக்களில் திராவிட கழகங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தி அப்படி ஏற்படுத்திய உபகழகங்களை ஜில்லா கழகத்திற்குத் தெரியப்படுத்தி ஜில்லா கழகத்துடன் இணைத்துக் (ரிஜிஸ்டர்) கொள்ளவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுவதோடு, அடுத்த ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து மாணவ சுற்றுப் பிரசாரகர்கள் நமது ஜில்லாவுக்கு சுற்றுப்பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்துவருவதால் நமது ஜில்லாவின் பல பாகத்தில் உள்ள நமது இயக்க அன்பர்கள் ஜில்லா தலைமை நிலையத்திற்கு தெரியப்படுத்தி தங்களுக்கு எந்தத் தேதிகளில் சௌகரியம் ஏற்படும் என்பதை உடனே தெரியப்படுத்தவும், இதில் ஒரு 'காபி'யை திராவிட மாணவர் பிரசாரக் கழகம், ஈரோடு என்ற விலாசத்திற்கும் தெரியப்படுத்தவேண்டுமாயும் இத்துடன் நமது ஜில்லாவில் உள்ள திராவிட கழகத்தினரும் தனிப்பட்ட இயக்க அன்பர்களும் 7, 8-5-45-ந் தேதி சென்னையில் நடந்த ஜஸ்டிஸ் மாகாண மாநாட்டையும் அதில் நிறைவேற்றிய சில தீர்மானங்களையும் கண்டித்து சென்னை சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் தெரியப்படுத்தி இதில் ஒரு காபியை ஈரோடு 'குடி அரசு' ஆபீசுக்கும் தெரியப்படுத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எம். நடேசன், ஜில்லா திராவிட கழகக் காரியதரிசி; வி. எம். ராஜமாணிக்கம், ஜில்லா திராவிட கழக அமைப்பாளர்.

## இரங்கல்

தஞ்சைத் தோழர் ஆர். தியாகசம்பந்தம் அவர்களின் குமாரர்கள் இளங்கோவன், இளவழகன் ஆகியவர்கள் இயற்கையெய்தியதைக்கண்டு வருந்தி அன்னார்களின் பெற்றோர்களுக்கு காந்தை, தஞ்சை திராவிட வாலிபர் கழகத்தார் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறார்கள்

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.